# இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

---

பாராளுமனறச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் இணையத்தளப் பதிப்பாசிரியர் (ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்கு சிறந்த தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ் தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, கல்வி மற்றும் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2025.09.21** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் **"பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட வேண்டும். (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk என்ற இணைய தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

1. **சம்பள அளவுத்திட்டம்:-**
   2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 74,810-9x1,360/6x1,670-97,070/- ஆகும் (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தச் சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த மாதாந்த சம்பளம் ரூ. 114,715/- ஆகும்).

2. **வயதெல்லை:-**
   விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும், 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

3. **கல்வித் தகைமைகள்:-**

   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணினி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் / தகவல் முறைமை பற்றிய பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   **அத்துடன்**

   க.பொ.த (சாதாரணத் தர) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

4. **தொழில் தகைமைகள்:-**

   அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் Java மற்றும் scripting மொழி அதாவது Java Script மற்றும் PHP போன்ற எழுத்துரு மொழி பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அத்துடன்**

MySQL/MSSQL போன்ற தரவுமூல முகாமைத்துவ முறைமை மற்றும் Apache, IIS வலைச் சேவையகங்கள் (web server) பற்றிய சான்றிதழ் ஒன்றைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்

**5. அனுபவம்:-**

தகைமைகளைப் பூர்த்திசெய்த பின்னர் இணையத்தளப் பதிப்பு அல்லது விருத்திசெய்தல் பற்றிய மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**6. ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்து / தொழில்சார் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**7. பரீட்சை நடவடிக்கை முறை:-**

(அ) எழுத்து / தொழில்சார் பரீட்சை

எழுத்து / தொழில்சார் பரீட்சையின்போது, விண்ணப்பதாரர்கள் தொழில்சார் பணிப்பொறுப்புகள் தொடர்பாக கொண்டிருக்கும் அறிவும் புரிந்துகொள்ளலும் பரிசீலிக்கப்படுவதுடன், இப்பரீட்சையில் அதிகபட்சமாக பெற்றுக்கொள்ளக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) நேர்முகப் பரீட்சை

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழுவால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரசீலிக்கப்படும்.

எழுத்து / தொழில்சார் பரீட்சையில் நாற்பது (40) இலும் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், நேர்முகப் பரீட்சையில் பின்வரும் தகுதிறன்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். இவற்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்:-

| தொடர் இலக்கம் | தகுதிறன் |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில்சார் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறன்கள் |

**8. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்**:-

**(i)** இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து பற்றி அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு விண்ணப்பதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரச/ மாகாண அரச சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

**(ii)** தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க இயைந்தொழுக வேண்டும்.

**(iii)** தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள்/தபுதாரர்கள் அநாதைகள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையைச் செலுத்த வேண்டும்.

**(iv)** தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

**(v)** தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

**9.** விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். தேவைப்படுத்தப்படும்போது மட்டும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்
(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்
(ஈ) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

**10.** அரச/மாகாண அரச சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

**11.** பதவியைப் பெற ஏதாவது ஒரு விதத்தில் அழுத்தம் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

**12.** விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதேனும் தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் எனக் குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

**13.** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படுகின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (தற்பொழுது அரசாங்க/மாகாண அரச சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற) அல்லது மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குஷானி ரோஹணதீர**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**,**
2025.................ஆம் திகதி.